
Sponsors
Country Partner
GREAT
Lunch Sponsor
FICCI Higher Education S
it 2014
Higher Education Vision 2030: Mak
Happen
November 13-14, 2014-N
FICCI
Thank You Sponsors
Silver Sponsors
Microsoft
manipalglobal
Session Sponsor
NMIMS
GREG CLARK
SMRITI ZUBIN IRANI
SURI
MOHANDAS PAI

FICCI

FICCI

# Certificate

FICCI HIGHER EDUCATION AWARDS 2014

*Awarded to*

*Tamil Nadu Agricultural University*

*for*

*Overall Excellence*

Official Tabulator

99MEDIA

A Didar Singh
Secretary General

## இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை சம்மேளன கூட்டமைப்பின் ஒட்டுமொத்த சிறப்பு விருதை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

இந்தியாவில் உயர் கல்வியில் சாதனை புரிந்து சிறந்து விளங்கும் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்காக உயர் கல்வி விருதினை இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை சம்மேளன கூட்டமைப்பு 2014ஆம் ஆண்டில் நிறுவியுள்ளது. 2014 ஆம் ஆண்டிற்கான இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை சம்மேளன கூட்டமைப்பின் 10வது உயர் கல்வி உச்சி மாநாடு இந்தியா மற்றும் இங்கிலாந்து இணைந்து நவம்பர் 13, 2014லில் புது தில்லியில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தின் தொடக்க விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ஒட்டு மொத்த சிறப்பு விருது வழங்கப்பட்டது. உலக அளவில் இந்திய உயர் கல்வியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சிறந்து விளங்குவதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதிற்கு பொது மற்றும் தனியார் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என 60 நிறுவனங்கள் போட்டியிட்டதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்த விருதினை பெற்றுள்ளது.

இந்த விருதினை அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாநில ஆளுநர் நிக்கி ரண்தாவா ஹேலி அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்க பல்கலைக் கழகத்தின் சார்பில் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் இயக்குநர் முனைவர் மு. சந்திரசேகரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விருதானது மாண்புமிகு மனித வள மேம்பாட்டு அமைச்சர் திருமதி ஸ்மிருதி ஜீபின் இராணி, இங்கிலாந்து நாட்டின் பல்கலைக் கழகங்களுக்கான அமைச்சர் திரு. கிரேக் கிளார்க் அவர்கள், இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை சம்மேளன கூட்டமைப்பு உயர் கல்விக் குழு தலைவர் திரு. மோகன் தாஸ் பய் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

இவ்விருதிற்கான தேர்வுக் குழுவிற்கு உயர் அளவில் நடுவர்களாக இருந்தவர்கள் திரு. எம். தாமோதரன் முன்னாள் தலைவர் (SEBI,UTI மற்றும் IDBI) அவர்களும் மற்ற குறிப்பிடத்தக்க அளவில் அமைந்த உறுப்பினர்கள் திரு. அமிர்தா சர்மா, இந்திய அரசின் கூடுதல் செயலர் (தொழிற்கல்வி) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், பேராசிரியர் எம். அனந்தகிருஷ்ணன் தலைவர் (BOG) இந்திய தொழில் நுட்ப நிறுவனம் (IIT) கான்பூர், திரு. டிவி. மோகன்தாஸ் பய், தலைவர், மணிபால் உலகக் கல்வி சேவை தனியார் நிறுவனம் மற்றும் திரு கே. வெங்கடரமணன் முதன்மை செயல் அலுவலர் மற்றும் நிர்வாக இயக்குநர், லார்சன் & டியூப்ரோ லிமிடெட் ஆகியோர் அடங்கிய குழுவினரால் இவ்விருது தேர்வு செய்யப்பட்டது.

இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை சம்மேளன கூட்டமைப்பின் ஒட்டு மொத்த உயரிய விருதானது இப்பல்கலைக் கழகம் கல்வியில் முதன்மை, சிறந்த ஆராய்ச்சி மற்றும் துரிதமான முறையில் தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்ப உபகரணங்களைக் கல்வியில் பயன்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கச் செயல்பாடுகளை சிறப்பான முறையில் செய்து வருவதற்காக வழங்கப்பட்டது. தரமான கல்வி, பணியாளர்களுக்குப் பயிற்சி, மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு, கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் மற்றும் பன்னாட்டு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல் ஆகியன கல்வித் தரவரிசையிலும், உலக அளவில் புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை உருவாக்குதல், காப்புரிமை பெறல், பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் கூட்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தரமான வெளியீடுகள், அரசுக்குத் தேவையான திட்ட உதவிகளைச் செய்தல் ஆகியன ஆராய்ச்சித் தர வரிசையிலும் மற்றும் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு சென்று பயனடைய செய்வது. தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்ப உபகரணங்களைப் பயிற்றுவித்தல் மற்றும் கற்பிக்கும் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல், இணைய வழி பதிவு செய்தல், விரிவாக்க நடவடிக்கைகள், இணைய வேளாண்மைத் திட்டம், இணைய இதழ்கள் மற்றும் இணைய வழியான நூல்களை நூலக பயன்பாட்டில் நடைமுறைப்படுத்ததுதல் ஆகிய பல்வேறுபட்ட காரணங்களுக்காக இந்த உயரிய விருதானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டது.